


அடடா! இந்த மதம் என்பது இருக்கிறதே, இதற்கு பகுத்தறிவு என்பதைக் கண்டால் கட்டோடு பிடிப்பதே இல்லை! எதையும் அச்சம் தயை தாட்சண்ணியமின்றி ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவுப் பண்பாட்டை, மதம், எல்லாக் காலங்களிலும், தன்னுடைய பரம்பரை விரோதியாகவே எண்ணிவந்திருக்கிறது!

—ஷெல்லி


ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு


தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 7
21—5—49 சனிக்கிழமை

வீச்சு 38


## ஊருக்கு உபதேசிகள்!




அதிக சம்பளம் கேட்ட பஸ் தொழிலாளர்களை வேலையைவிட்டு விரட்டியடித்த சென்னை காங்கிரஸ் மந்திரிகள் — "விலைவாசிகள் விஷம்போல் ஏறிவிட்டன, கிடைக்கும் சம்பளம் போதவில்லை" என்று கூறிய என். ஜி. ஓக்களை சிறையில் அடைத்துப் பூட்டிய சென்னைகாங்கிரஸ்மந்திரிகள் -நடத்துவதற்குப் பணமில்லை என்ற காரணத்தைக் காட்டி ஆரம்பப் பள்ளிகள் பலவற்றை மூடித் தொலைத்த சென்னை காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் மாத சம்பளத்தை மட்டும் 500 லிருந்து 850 ஆக உயர்த்தினர் முன்பு! இப்போது அதுவும் போதவில்லை என்று 850 ஐயும் 1000 ஆக உயர்த்துகின்றனர். "சர்க்கார் கஜானாவில் பணம் இல்லாதபோது சர்க்காரிடமிருந்து அதிக சம்பளம் கோருவது தேசத்துரோகம்!"—இது மந்திரிமார்கள் ஊருக்கு அளிக்கும் உபதேசம்! ஆனால் இந்த உபதேசம் அவர்கட்கு மட்டும் பொருத்தமில்லை போலும்!

**அழிவுவேலை முடிந்தபிறகே ஆக்கவேலை தொடக்கமாகும்!**

—லெனின்.

# ஏன்? எப்படி? எதற்காக?

★

## கேள்வியும் விடையும்

★

[ இளஞ்செழியன் ]

**1. இந்தியக் கம்யூனிஸ்டுகள் பேசிவரும் கம்யூனிசத்திற்கும் உங்களுடைய திராவிடர் கழகக் கம்யூனிசத்திற்கும் என்ன வேறுபாடு?**

மதம் மக்களை மயக்கும் அபின் என்றார் கம்யூனிசத் தந்தை காரல் மார்க்ஸ். மதம் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை என்றார் சோவியத் ரஷ்யாவின் நிர்மாண கர்த்தா லெனின். "மக்களின் அபின் ஆகிய மதத்தை எதிர்த்துப் போராடுவது என்பது கலாசாரப் புரட்சி வேலைகளில் மிக முக்கியமானது. இந்த மத எதிர்ப்புப் போராட்டம் இடைவிடாமலும் முறையாகவும் நடந்துகொண்டிருக்கவேண்டும்" என்பது அதே மாவீரர் லெனின் புரட்சிவாதிகளுக்குப் பிறப்பித்த தாக்கீது. இந்த மூன்று கருத்துரைகளையும் எங்களுடைய இருதய கீதமாகக் கொண்டு, இந்தக் கருத்துரைகளுக்கு ஏற்ப, மத எதிர்ப்புப் போராட்டத்தை முறையாகவும் இடைவிடாமலும் செய்துவருகிறோம் நாங்கள். இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்டுகளோ புரட்சித் தலைவர் லெனினின் இந்த அரிய கட்டளையை அடியோடு மறந்துவிட்டு, மத எதிர்ப்பு என்ற வார்த்தையைக் கேட்டாலே, புரோகித ஆட்சியை ஒழிப்பது என்ற எண்ணத்தை எண்ணினாலே அஞ்சி நடுங்குகின்றனர். சோவியத் ரஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் புரட்சியின் வரலாற்றை மேற்போக்காகப் படிப்பவர்கள்கூட, அங்கு, புரட்சிக் காலத்திலும் சரி, புரட்சி நடைபெறுவதற்கு முன்னால் புரட்சிக்கான அடிப்படை வேலைகள் செய்யப்பட்ட காலத்திலும் சரி, புரட்சிக்குப் பின்னால் புதிய ரஷ்யா உருவாக்கப்பட்ட காலத்திலும் சரி, மத எதிர்ப்பு வேலையானது எவ்வளவு தீவிரமாக நடைபெற்றது என்பதைத் தெளிவாக உணர முடியும். சீமானை மட்டுமல்ல புரோகிதனையும் அங்கே ஒழித்தார்கள். பூர்ஷ்வாக்களை மட்டுமல்ல ரஸ்புட்டீன்களுக்கும் மரண ஓலை தயாரிக்கப்பட்டது ரஷ்ய நாட்டு அக்டோபர் புரட்சியில். ஆனால் இங்கேயோ, கம்யூனிஸ்டுகள் சீமான்களை ஒழிக்கத் தயாராய் இருக்கிறார்கள். ஆனால் சீமான்கள் கரத்திலே விதி என்னும் பலமான ஆயுதத்தைத் தந்து அவனது செல்வாக்குக்கும் செல்வத்திற்கும் "முன் ஜென்மத்தில் அவன் செய்த நல்வினையின் பயன்களே இவை" என்று மத முத்திரையைப் பொறிக்கின்ற புரோகிதர்களை ஒழிக்க அஞ்சுகிறார்கள் என்பது மட்டுமல்ல உண்மை, புரோகிதத்வம் ஒழிக என்று கூறவே அஞ்சுகிறார்கள். இந்தியப் பாட்டாளிகளும், வேற்று நாட்டுப் பாட்டாளிகளைப் போலவே, சென்ற சில பல ஆண்டுகளாக தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கியிருக்கிறார்கள். "உழைப்பது நாங்கள்—உண்பது வேறு கூட்டமா?" "ஓயாமல் உழைத்து உழைத்து உருமாறுகிறோம் நாங்கள்—ஆனால் ஓயாமல் உண்டு உண்டு உருமாறுகிறது இன்னொரு கூட்டம், இது நீதியா?" "உண்பதற்கு உணவும் வாழ்வதற்கு வீடும்கூட இல்லாமல் நாங்கள் வதைவதா—அது முடியாது!" "முதலாளித்வ முறைக்கு முடிவு கட்டுவோம்" என்றெல்லாம் பாட்டாளிகள் உரிமை முழக்கம் புரியத் தொடங்கியிருக்கிறார்கள். தொழிலாளர்தம் இந்த விழிப்புணர்ச்சிக்கு கம்யூனிஸ்டுகளின் பணியும் ஓரளவுக்கு உறுதுணை புரிகிறது என்பதை நாம் சிறிதும் மறுக்கவில்லை. ஆனால் தொழிலாளி, முதலாளியை நோக்கி, "இருவரும் மனிதர்கள்தானே! என்றாலும் எனக்கு ஏன் சாக்கடை ஓரத்தில் செத்த வாழ்வு, உனக்கு ஏன் எட்டடுக்கு மாளிகையில் இந்திரலோகம்?" என்று கேட்கத் தொடங்கினால் உடனே, புரோகிதன், திருநாளாக, திருவிழாவாக, புராண இதிகாசமாக, வேத ஆகமமாக, பஞ்சாங்கமாக, சடங்குகள் நடத்துபவனாக, பற்பல வடிவத்தில், தொழிலாளிமுன் தோன்றி, "அடே பாபாத்மா—நீ இப்படிக் கேட்கலாமா—இப்படிக் கேட்பது ஆண்டவனுக்கு நீ செய்யும் அபசாரம் அல்லவா—முன் ஜென்மத்தில் நீ பாப காரியங்கள் பல செய்தாய்—அதன் பயனை இப்போது அனுபவிக்கிறாய்—அந்த சீமான், முன் ஜென்மத்தில் புண்ணியங்கள் பல புரிந்தவர் எனவே போக போக்கியங்களை அனுபவிக்கிறார்—இதை நீ கண்டிக்கலாமா நீசா—இதை நீ கண்டிப்பது, கண்டித்து, சகல வசதிகளையும் நீ கோருவது, முன் ஜென்மத்தில் நீ செய்த பாபங்களுக்கு ஏற்ற தண்டனையை ஏற்க மறுக்கிறாய் என்றல்லவா பொருள்படும் — தகுமா இது—ரௌரவாதி நரகம் அல்லவா இந்தக் கொடிய பாவத்திற்குச் சம்பவிக்கும்—எண்ணிப்பாரடா நீசா, எண்ணிப்பார்—ரௌரவாதி நரகம் தேவையானால் பேஷாகப் போராடு முதலாளியிடம் — ஆனால் அடுத்த ஜன்மத்தில் இந்தப் புதிய பாவத்திற்கும் சேர்த்து தண்டனையை அனுபவிப்பாய்—நாயாகவோ கழுதையாகவோதான் பிறப்பாய்—வேண்டாமடா பாவி, கெட்டுப் போகாதே" என்று கூறுகிறான். உடனே தொழிலாளி நடுங்கும் முகத்துடன், நீர் வழியும் கண்களுடன், தன்னைப் போராடத் தூண்டிய கம்யூனிஸ்டைப் பார்க்கிறான்! கம்யூனிஸ்ட் நண்பர்களோ, இதற்குத் தக்க விடையைக் கூறி, தொழிலாளியின் நடுக்கத்தைத் தீர்க்காமல் கண்மூடி மௌனியாகிறார்கள்! தொழிலாளி திகைக்கிறான்! இந்த இடத்திலேதான் திராவிடர் கழகத்தவர்களாகிய நாங்கள் முன் வினைப் பயனா—அது பொய்! புரோகிதன் புரட்டை நம்பாதே—அவன் பொய்யன்! வேத புராண இதிகாசங்கள் விதி விதி என்று பேசுகின்றனவா—அவை, சூதர் உரைத்த உரை என்று பகுத்தறிவு விளக்கம் தருகிறோம். தொழிலாளி களிப்படைகிறான். திகைப்பு தீர்கிறது. தெளிவான உள்ளத்துடன் தன் முதலாளித்வ எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்குகிறான். ஆம் இந்தியக் கம்யூனிஸ்டுகள் சீமான்

(12-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவாளர், தோழர், என்னும் இந்த இரு சொற்களும் தமிழ்ச் சொற்களே என்றாலும் நான் இவற்றில் தோழர் என்ற சொல்லைத்தான் மிகவும் விரும்புகிறேன். காரணம், தோழர் என்ற சொல்லிலே பொதிந்து கிடக்கும் தோழமை உணர்ச்சி — சமதர்ம தத்துவம்—ஏற்றத் தாழ்வற்ற சமுதாய எண்ணம் திருவாளர் என்ற சொல்லிலே இல்லை. கவர்னர் ஜெனரலாக இருக்கும் ராஜகோபாலாச்சாரியாரையும் தோழர் ஆச்சாரியார் என்று குறிப்பிட்டு, வீதி கூட்டும் வீரப்பனையும் தோழர் வீரப்பன் என்று குறிப்பிட்டால் அப்போது நம் உள்ளத்தில் நம்மை அறியாமலே ஒருவித சமதர்ம வாடை வீசுகிறது — எனவே 'தோழர்' தான் நமக்கு வேண்டும்.

### 5. சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் இரண்டிற்கும் உள்ள தொடர்பு எத்தகையது? விளக்க முடியுமா?

ஆஹா! தாராளமாக முடியும்! முடியாமலென்ன? விளக்க முடியுமா என்று ஏதோ ஒருவகை ஐயத்துடனே கேட்கிறீரே, ஏன் வந்தது உமக்கு அந்த ஐயம்? ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே உள்ள தொடர்பை உணரத்தான் முடியுமே தவிர வார்த்தைகளால் உரைக்க முடியாது என்பார்களே மதவாதிகள் அதுபோல இதுவும் ஏதாவது விளக்க முடியாத மாயை என்று எண்ணிக்கொண்டீரா என்ன? சுருக்கமாகக் கூறுகிறேன், சுயமரியாதை இயக்கம், ஒரு தத்துவம். திராவிடர் கழகம் அந்தத் தத்துவத்தை நடைமுறையில் நிலைநாட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு கருவி. சுயமரியாதை இயக்கத்தை இன்னிசை என்று கூறினால், திராவிடர் கழகத்தை அந்த இசையை முழக்கும் யாழ் என்று கூறலாம். சுயமரியாதை இயக்கத்தை கலை என்று கூறினால் திராவிடர் கழகத்தை அந்தக் கலையை ஒளிவீசச் செய்யும் சிலை என்று கூறலாம். சுயமரியாதை இயக்கத்தை வாள் என்று கூறினால், திராவிடர் கழகத்தை அந்த வாளை ஏந்தி இருக்கும் வீரன் என்று கூறலாம். சுயமரியாதை இயக்கம், தென்றல்! திராவிடர் கழகம், அந்தத் தென்றல் வீச வசதி தரும் வான்! சுயமரியாதை இயக்கம், சுவை! திராவிடர் கழகம் அந்தச் சுவை ததும்பி நிற்கும் தேன்! சுயமரியாதை இயக்கம் மின்சார சக்தி. திராவிடர் கழகம், அந்த மின்சார சக்தியைப் பரவச்செய்யும் கம்பி. சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு. திராவிடர் கழகம் அந்தப் பகுத்தறிவைப் பரவச் செய்யும் புத்தகம். **மதவாதிகளின் பழமை நடையிலே பேசுவதானால்,** சுயமரியாதை இயக்கம் ஆத்மா! திராவிடர் கழகம், அந்த ஆத்மாவை இயக்கி வைப்பதற்கு ஏற்றவாறு இயங்கிவரும் மனித உடல்! **விஞ்ஞானிகளின் புதிய நடையிலே கூறுவதானால்,** சுயமரியாதை இயக்கம் அணுச்சக்தி. திராவிடர் கழகம் அந்த அணுச் சக்தியைக்கொண்டு இயங்கும் அணுக்குண்டு. **தமிழ்ப் புலவர்களின் அழகுநடையிலே மொழிவதானால்,** சு. ம. இயக்கம், செந்தமிழ்! திராவிடா கழகம் அச் செந்தமிழை ஓம்பும் தொல்காப்பியம்! **எல்லார்க்கும் புரியக்கூடிய எளிய நடையிலே இயம்புவதானால்,** சு. ம. இயக்கம் தாய்! திராவிடர் கழகம் அத் தாயின் புகழை திக்கெட்டும் பரப்பும் அறிவும் ஆற்றலும் படைத்த சேய்! சேயின்பால் நீங்காத அன்புடைய தாய்க்கும், தாயின்மீது எல்லையில்லாத அன்புடைய சேய்க்கும் இடையே உள்ள தொடர்பு எத்தன்மையதோ, அத் தன்மையதேதான் திராவிடர் கழகத்திற்கும் சு. ம. இயக்கத்திற்கும் இடையே உள்ள தொடர்பும்!

—

# பண்டித நேருவின் பரிதாப நிலைமை!

இந்தியாவை, அதன் விருப்பத்தைக் கேளாமலே பிரிட்டிஷ் 'காமன்வெல்த் என்ற சிலந்திக் கூட்டிலே சிக்கவைத்து விட்டாரல்லவா பண்டித நேரு, இந்தச் செயலை திராவிடர் கழகம் மட்டுமல்ல, கம்யூனிஸ்டு கட்சி மட்டுமல்ல, சோஷலிஸ்டு தோழர்கள் மட்டுமல்ல, சரத் போஸ் இயக்கம் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பலர் தீவிரமாகக் கண்டிக்கின்றனர். பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது நேருவுக்கு காங்கிரஸ் கூடாரத்துக்குள்ளேயே! நேருவின் செயலை ஆதரிப்பதாக டில்லி பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது' இந்தத் தீர்மானத்தை பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் ஆதரித்தே தீர வேண்டும் என்றும், மீறி எதிர்ப்பவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பாராளுமன்ற காங்கிரஸ் கொறடா உத்தரவு பிறப்பித்து விட்டார். என்றாலும் இந்த உத்தரவையும்மீறி சிவன்லால் சாக்சேனா என்பவர், நேருவின் முடிவை இப்போது ஒப்புக்கொள்ள முடியாது என்று தைரியமாக திருத்தத் தீர்மானம் கொண்டுவந்தார். இப்போது காங்கிரஸ் 'மேலிடம்'' நேருவை எதிர்த்து நின்றதற்காக அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளதாம்! ஐயோ பாவம், பண்டித நேரு! அவருக்கு முன்பு காங்கிரசில் இருந்த செல்வாக்கு, புகழ், சிறப்பு என்ன! இன்று கட்சிக் கட்டுப்பாட்டைக் காட்டி உறுப்பினர்களைப் பயமுறுத்தினால்தான் அவர்கள் நேருவை ஆதரிப்பார்கள் என்றுள்ள பரிதாப நிலைமை என்ன! பண்டித நேருவே! எவ்வளவு பிரமாண்டமான வீழ்ச்சியைப் பெற்றுவிட்டீர் நீர்!

## ஆச்சாரியார்—பெரியார் சந்திப்பு

கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் அவர்கள் திராவிடர் தலைவர் பெரியார் அவர்களை திருவண்ணாமலையில் சென்ற சனியன்று சந்தித்து நீண்டநேரம் உரையாடினார். சந்திப்பு முற்றிலும் தனிப்பட்ட நட்பு முறையில் அமைந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

# பஞ்சாபராவ் தேஷ்முக்!

★

## ஓர் அபாய அறிகுறி!

★

வட இந்திய ஏகாதிபத்தியம் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது, அதனை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும், இல்லையேல் பிறகு அதனை வீழ்த்துவது முடியாத செயல் என்று நாம் கூறினால், இங்கே உள்ள தேசீயவாதிகளின் முகம் சிறுத்துப் போய்விடுகிறது; சில சமயம் கறுத்தும் போய்விடுகிறது.

தென்னாடு தனிநாடாக அமைய வேண்டும், அதுவும் விரைவாக அமைய வேண்டும், அதுவும் வடநாட்டுடன் எவ்வித ஆட்சித்தொடர்பும் அற்ற தனிச் சுதந்தரக் குடியரசாக அமையவேண்டும் என்று நாம் 'விடுதலை முரசு' கொட்டினாலோ, தென்னாட்டு அஹிம்சாவாதிகளின் உள்ளம் பயங்கரமானதோர் எரிமலையாக மாறி, கோபாவேச அக்கினியையும் வசைச்சொல் தீக்குழம்பையும் நம்மீது வாரி வாரி வீசத் தொடங்கிவிடுகின்றது.

"தம்பி! இதோ பார்! இந்தப் பரந்த இந்திய பூபாகத்தின் பொருளாதார இயந்திரம்! இதனை இயக்கும் அதிகாரம், நீயே பார், இதோ வடநாட்டார் கையில் இருப்பதை! இதோ இந்தப் பக்கம் பார், இந்த இயந்திரம் எவ்வளவு சாமர்த்தியமாக, வடநாடு, தென்னாட்டைச் சுரண்டிக் கொழுப்பதற்கு ஏற்ற விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது! இந்தச் சூது உன் கண்முன்னாலே நடக்கிறதே, நீ பார்த்துக் கொண்டிருந்தும் சும்மா இருக்கிறாயே, நியாயமா" என்று நாம் புள்ளி விவரங்களோடு, வடநாட்டு வணிக வேந்தர்களின் இரும்புப் பிடியில் தென்னாடு சிக்கிச் சீரழிகின்ற பரிதாபக் கதையை எடுத்துக் காட்டினாலோ, கதர் சட்டைக்காரர்களின் கண்கள், திரிபுரம் எரித்தாராமே 'விரிசடைக் கடவுள் சிவனார், அவர்தம் நெற்றிக் கண் உண்டே அந்த நிலையை அடைந்து விடுகின்றன, அதாவது, நம்மை எரித்துவிடுபவை போலச் சீறிச் சினத்தைப் பொழிகின்றன!

பொருளாதார இயந்திரம் மட்டும் வடநாட்டார் கையில் சிக்கிக் கொண்டால் பரவாயில்லை, அரசியல அதிகாரத்தைக் கொண்டு அதனை மீட்டுக் கொள்ளலாம் என்று எண்ணி ஆறுதல் பெறலாம், ஆனால் இப்போதோ அந்த எண்ணத்தைக் கொண்டும் ஆறுதல் பெறுவதற்கு வழி இல்லையே, இந்திய அரசியல் அதிகாரம் முழுவதும் வடநாட்டார் கையில்தானே இருக்கிறது, இங்கே உள்ள தேசீயத் தலைவர்கள் எடுத்ததற்கெல்லாம் மேல் இடத்தைக் கேட்க வேண்டும் என்றுதானே கூறுகிறார்கள், அந்த 'மேல் இடம்' வடநாட்டில்தானே இருக்கிறது, அந்த மேல் இடத்து எஜமானர்கள் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கும் சிற்றாள்களாகத்தானே தென்னாட்டுத் தேசீயத் திலகங்கள் உள்ளன—எனவே தனிநாடாக மாறினால் ஒழிய எப்படி, தென்னாடு, இந்த சூது நிறைந்த சூழ்ச்சிப் பொறியிலிருந்து தப்ப முடியும் என்று நாம் கேட்டாலோ, இங்குள்ள காந்திபக்தர்கள் நம்மீது 144 ஐ ஏவுகின்றனர், 153ம் உண்டு தெரியுமா என்று கூவுகின்றனர், பாதுகாப்புச் சட்டம் தெரியாதா தம்பி என்று கொக்கரிக்கின்றனர், சிறைச்சாலையையும் மலபார் போலீசையும் சுட்டிக் காட்டுகின்றனர்—ஆனால் நாம் கேட்கும் கேள்விக்கு மட்டும் பதில் கூறுவதில்லை!

இதோ பார் குஜராத்தியின் ஹோட்டல்! இதோ பார் மார்வாரியின் பாங்க்! இதோபார் மூல்தானியின் தினசரி! இதோ பார் டால்மியாவின் சிமெண்ட் தொழிற்சாலை! இதோபார் சௌகார்பேட்டை! இதோபார் டாடாவின் ஆகாய விமானக் கம்பெனி! இதோபார் வால்சந்த் ஹீராசந்தின் கப்பல் தொழில் நிலையம்! இவ்வளவும், வடநாடு, தென்னாட்டை அடிமைப்படுத்திவிட்டது என்பதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள்! இந்தப் பத்திரங்களைக் கண்டுமா தோழா நீ திராவிடத் தனியரசு தேவை என்ற எங்கள் கோரிக்கையை மறுக்கிறாய் என்று சற்று விளக்கமாகவே நாம் பல்முறை நம் அன்பிற்குரிய மூவர்ணக் கொடியினரைக் கேட்டதுண்டு. அப்படி நாம் கேட்ட ஒவ்வொரு முறையும், மூவர்ணக் கொடியினர், ஆமப்பா ஆமாம் நீ அப்படித்தான் பேசுவாய் உனக்கென்ன வேலை என்று கேலி பேசி கெக்கலி கொட்டினரே தவிர நாம் கூறுவது தவறு என்பதற்கான ஆதார விளக்கம் புரிந்ததே கிடையாது!

உண்மையிலேயே இங்குள்ள பாரத புத்திரர்களுக்கு, நாளுக்கு நாள் வளர்ந்துவரும் வடஇந்திய ஏகாதிபத்தியத்தின் தன்மையை நாம் எடுத்துக் காட்டுகிறபோது கோபம் பொத்துக்கொண்டு வருகிறதே தவிர, நம்மைத் தேசத் துரோகிகள் என்று தூற்றுவதற்கு மற்றுமோர் வாய்ப்புக் கிடைத்த[...] என்ற எண்ணம் பிறக்கிறதே தவிர, "சூனாமானா அடியோடு ஒழிக" என்ற அவர்களின் பழைய சுலோகத்துக்குப் புதிய வலு[...] கிடைத்தது என்ற களிப்புத் தோன்றுகிறதே தவிர, இவர்கள் கூறுவது உண்மைதானே, வடநா[...] தானே எல்லாத் துறைகளிலும் எ[...] மானன் நிலையிலே இருக்கிற[...] லண்டன் இருந்த இடத்தி[...] தானே டில்லி இப்போது இருக்[...] றது, சர்ச்சில் இருந்த இடத்தி[...] தானே படேல் இப்போது இ[...] கிறார், வெள்ளை ஏகாதிபத்திய[...] ஒழிந்த பிறகு அந்த இடத்தி[...] வடநாட்டு ஏகாதிபத்தியம் அ[...] லவா அரியணை அமைத்[...] கொண்டு, கோலாகல வாழ்[...] வாழ்கிறது, இதைத்தானே இ[...] சூனாமானாவும் கூறுகிறான், இ[...] நிலை நீடிப்பது நம் தன்மான[...] திற்கு அவமானம் அல்[...]

என்றுதானே கேட்கிருன், வெள்ளை ஆட்சிக்கு ஒரு 300 ஆண்டுகள் அடிமைகளாக இருந்தது போதாதா — இனி வடநாட்டவர் ஆட்சிக்கு வேறு ஒரு 300 ஆண்டுகள் அடிமைகளாக இருக்க வேண்டுமா — இது சரியா — முறையா— நீதியா என்றுதானே அவன் பேசுகிருன், நியாயந்தானே அவன் பேசுவது என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதே கிடையாது. பொதுவாகவே, நம் விளக்கவுரையைக் கேட்டதும், தங்கள் தூற்றல் உரையைத் தொடங்குவதுதான் தேசபக்தர்களின் வழக்கமாக இருந்துவருகிறதே தவிர, நாம் கூறுவதை நன்கு அலசி ஆராய்ந்து, நம் கூற்றிலே இருக்கும் உண்மையை உணரவேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்குப் பிறப்பதில்லை. அதிலும் தேசபக்தர்கள் ஆளவந்தார்களாக ஆனபிறகு, உண்மையின் உருவத்தைத் தூரத்தில் கண்டால்கூட, அதற்கு அஞ்சி ஓடி ஒளிந்துகொள்ளும் 'பண்பு' அவர்களிடம் அமோகமான அளவுக்கு உண்டாகிவிட்டது. வடநாடு—தென்னுடு பிரச்சினையைப் பொறுத்தவரையிலே தென்னுட்டுத் தேசீயவாதிகளின் கண்கள் உண்மையை உணர மறுப்பதற்கு மற்ளெரு முக்கியமான காரணமும் உண்டு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, விடுதலைப் போர் நிகழ்த்தப்பட்ட காலங்களில் எல்லாம், தென்னுட்டுத் தேசீயவாதிகள் வடநாட்டுத் தலைவர்களின் தலைமையின்கீழ் இருந்து பணியாற்றியவர்கள். எனவே இவர்களுக்கு, இவர்களை அறியாமலே, வடநாட்டுத் தலைவர்கள்மீது ஒருவித பரிவு, பாசம், பற்று ஏற்பட்டுவிட்டது. அந்தப் பற்றுதான், இப்போது, வடநாட்டு ஏகாதிபத்தியம் வளர்ந்து வருகிற உண்மையை காங்கிரஸ் வாதிகளின் கண்களுக்குத் தெரியாவண்ணம் மறைத்துவரும் திரையாக இருக்கிறது. அந்தத் திரை விலக வேண்டும், விலகினுல்தான், உண்மை, நம் மூவர்ணக் கொடியினருக்கு நன்கு தெரியும்.

திரை விலகுவதற்கான ஒரு நல் வாய்ப்பு இப்போது கிடைத்திருக்கிறது!

**டாக்டர் பஞ்சாபராவ் தேஷ்முக்**, பீகார் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ்காரர்! அரசியல் ஆக்க மன்ற உறுப்பினர்! அவர், மே 8-ம் தேதியன்று, அரசியல் ஆக்க மன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்காக ஒரு தீர்மானத்தை அனுப்பி வைத்திருக்கிருர். அந்தப் புதிய தீர்மானம், வடநாட்டு ஏகாதிபத்தியம் எந்த அளவுக்கு வளர்ந்துவிட்டது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டும் ஓர் அருமையான அபாய அறிகுறி!

**டாக்டர் பஞ்சாபராவ் தேஷ்முக்** கொண்டுவந்துள்ள தீர்மானத்தின் முக்கிய பகுதிகள் என்னென்ன தெரியுமோ, இதோ பாருங்கள் அவற்றை!

1. இந்தியாவில் உள்ள பல்வேறு மாகாண சட்டசபைகள் யாவும் உடனே கலைக்கப்பட்டுவிட வேண்டும்.

2. அதுவே போல, மாகாண மந்திரி சபைகள் யாவும் கலைக்கப்பட்டு விடவேண்டும்.

3. அதுவேபோல, இப்போதுள்ள தங்கட்கு என்று சில தனி உரிமைகளும் கடமைகளும் படைத்த மாகாண சர்க்கார்கள் யாவும் கலைக்கப்பட்டுவிட வேண்டும்.

4. இவ்வண்ணம், மாகாண சட்டசபைகள், மந்திரி சபைகள், சர்க்கார்கள் இம்மூன்றும் கலைக்கப்பட்ட பிறகு, இந்தியா முழுவதிலும் ஒரே ஒரு மந்திரிசபைதான் இருக்கும்—அதுதான் டில்லியில் உள்ள அகில இந்திய மந்திரிசபை! அதுபோலவே, இந்தியா முழுவதற்கும் ஒரே ஒரு சர்க்கார்தான் இருக்கும்—அதுதான் டில்லியில் உள்ள அகில இந்திய சர்க்கார்! அதுபோலவே இந்தியா முழுவதற்கும் ஒரே ஒரு சட்டசபைதான் இருக்கும்—அதுதான் டில்லி சட்டசபை! இப்போது தனித்தனி மாகாண சட்டசபைகளாலும் மந்திரி சபைகளாலும் சர்க்கார்களாலும் ஆளப்படும் மாகாணங்கள் யாவும், இந்தப் புது ஏற்பாட்டின்கீழ், **நேரடியாக** டில்லியிலிருந்து, அகில இந்திய சர்க்காராலும், அகில இந்திய மந்திரிசபையாலும், அகில இந்திய சட்டசபையாலும் ஆளப்படும். அதாவது மாகாண சுய ஆட்சி என்பது இனி இராது!

இவை, **டாக்டர் பஞ்சாபராவ் தேஷ்முக்** கொண்டுவந்துள்ள தீர்மானத்தின் பகுதிகள்! இந்தத் தீர்மானம் நிறைவேறிவிடுமானுல், பிறகு, இந்தியாவிலே மாகாண சர்க்கார்களோ சட்டசபைகளோ மந்திரிசபைகளோ இருக்கமாட்டா! இந்திய சர்க்கார், டில்லியிலே கொலுவீற்ற வண்ணம், கட்டளைகளைப் பிறப்பிக்கும். அந்தக் கட்டளைகளை எழுத்துக் கெழுத்து நிறைவேற்றி வைக்கும் அதிகாரிகள் கரத்திலே ஒவ்வொரு மாகாணமும் ஒப்படைக்கப்படும். இப்போது, சென்னை சர்க்கார் பிறப்பிக்கும் கட்டளைகளை நிறைவேற்றி வைக்கும் அதிகாரிகளாக ஜில்லா கலெக்டர்கள் இருக்கிருர்கள் அல்லவா, அப்படித்தான், இந்தத் தீர்மானம் நிறைவேறி விட்டால், பிறகு, டில்லி சர்க்கார் பிறப்பிக்கும் உத்தரவுகளை நிறைவேற்றி வைக்கும் மாகாண கலெக்டர்கள், ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொருவர், நியமிக்கப்படுவர். நமது பிரதிநிதிகளை நமது சட்டசபைக்கு அனுப்பி நமது மாகாணத்தை நாம், நம் மந்திரிசபை மூலம் ஆள்வது என்பதெல்லாம் பழங்கதையாகிவிடும்! நம் மாகாணம், டில்லி தேவதைகளால் நியமிக்கப்படும் அதிகாரிகள் மூலமாக, டில்லி தேவதைகளின் இஷ்டபூர்த்திக்கு ஏற்றவண்ணம், டில்லி தேவதைகள் அவ்வப்போது போடும் கட்டளைகளுக்கு ஏற்ப, ஆளப்படுகின்ற எதேச்சாதிகார நிலைமை உருவாகும். நமதுமொழி, நாகரிகம், கலை, பண்பு, கொள்கை கோட்பாடு இவற்றைப் போற்றி வளர்ப்பதற்காக நமது மாகாணத்தில் நமது சர்க்கார் இராது. எங்கோ இருக்கும் டில்லியில் இருக்கும் யாரோ சில வடநாட்டவர்கள் நம்மை ஆள்வர். அவர்கள் நம் கலாசாரத்தின் "டிரஸ்டிகள்" ஆக இருப்பர்! அதாவது எலிகள் கூட்டத்திற்குப் பூனைகள் டிரஸ்டிகளாக இருந்தால் எப்படி இருக்குமோ அப்படிப் போல, அல்லது, மனிதக் கூட்டத்திற்கு கச்சுப்பாம்புகள் டிரஸ்டிகளாக இருந்தால் எப்படி இருக்குமோ அப்படிப் போல! உவமான உவமேயங்களை நீக்கிவிட்டு, உண்மையை உள்ளபடி உரைப்பதானுல், பஞ்சாபராவ் தேஷ்முக்கின் தீர்மானம் நிறைவேறிவிட்டால், பிறகு, நமது கலையும் நாகரிகமும் வாழ்வும் அடியோடு நசித்துப் போய்விடும். வடநாட்டு ஏகாதிபத்தியம் ஜாம் ஜாம் என அரசோச்சும்! தென்னுடு, தலை குனிந்து கொண்டு, வடநாடு இட்ட ஏவலுக்கு ஏன் என்று கேட்கும்

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 7
21—5—49 சனிக்கிழமை

# வந்தாரய்யா வந்தார்!

வந்தார்!

அன்பர் ஆச்சாரியார் வந்தார்!

நாற்பது கோடி மக்களைக் கொண்ட இந்தப் பரந்த இந்தியத் துணைக் கண்டத்தின் மகத்தான கவர்னர் ஜெனரல் வந்தார்!

மனிதகுல மாணிக்கம் என்று அகில உலகமும் அன்புடன் கூறி இன்புடன் பாராட்டுகின்ற உலக உத்தமர் காந்தியாரின் திருமகனைத் தம் திருமகளின் திருக்கணவனாகப் பெறும் திருப்பேறு பெற்ற திருமிகு தலைவர் வந்தார்!

"தென்னாட்டு மூளை" என்று ஆரிய வட்டாரத்தவர் ஆநந்தத் தோடும் பூரிப்போடும் மார்பிலே தவழும் முப்புரி நூலை உருவிய வண்ணம் கூறிக் கூறிப் பெருமிதம் அடையும் பேரறிவாளர் வந்தார்!

தமிழகத்தின் தனிப் பெருந் தலைவர் என்றும் தென்னிந்தியாவின் ஒப்பற்ற அறிவாளி என்றும் இந்தியாவிலே இணையற்ற இராஜதந்திரி என்றும் வெள்ளையர்களையே நடுங்கவைத்த புத்திகூர்மை படைத்தவர் என்றும் ஆநந்தவிகடன்களும் கல்கிகளும் கிழமை தோறும் எழுதி எழுதி மகிழ்கின்ற முதுபெருந் தலைவர் வந்தார்!

தியாகத்திலும் தீரத்திலும் அறிவிலும் ஆற்றலிலும் அவருக்கு இணையானவர் அவரே தான் என்று காங்கிரஸ் வட்டாரம் களிப்புடன் கூறி, இறும்பூது அடைந்து, மகிழ்வுடன் உலவிடும் அந்த அளவுக்கு அருந்திறல் அமைந்த "அறிஞர்க்கு அறிஞர்" வந்தார்!

இரும்பு மனிதர் வல்லபாய் பட்டேலும் சாந்த சொரூபன் ராஜன் பாபுவும் ஒருமனதோடு போற்றிப் புகழும் பெருஞ் சிறப்பு வாய்ந்த "கருப்புக் கண்ணாடிக்காரர்" வந்தார்!

தன்னலம் என்பதே துளியும் அற்ற தனிஉயர் பெருங்குணம் தன்னிடம் அமைந்தவர் என்று அவருடைய மாற்றுக் கட்சித் தலைவர் பெரியார் இராமசாமியாலேயே பூரிப்புடன் குறிப்பிடப் படும் "புண்ணிய புருஷர்" வந்தார்!

ஏடுகளெல்லாம் களிக்க, ரேடியோக்கள் சேதியை ஒலிக்க, "கவர்னர் பெருமான்" பக்கத்தே வர, போலீஸ் கூட்டம் புடை சூழ, படேல் துரையிடமிருந்து 'வாழ்த்து' வர, பற்பல படங்கள் இதழ்களில்ஜொலிக்க, காமிராக்கள் கிளிக் கிளிக் போட, பெரும் பெரும் செல்வர்கள் ஏன் என்று கேட்டு நிற்க, புன்னகை பூத்த முகத்துடனே பூமாலைக் கடலை நீந்திய வண்ணம் வந்தார்!

வருகிறார் வருகிறார் என்று வானொலி கூறிற்று! வருகிறார் வருகிறார் என்று பத்திரிகைகள் கூறின! வருகிறார் வருகிறார் என்று அமைச்சர்கள் கூறினர்! வருகிறார் வருகிறார் என்று தலைவர்கள் முரசு கொட்டினர்! வருகிறார் வருகிறார் என்று எங்கெங்கும் பேச்சு எழுந்தது! இதோ வருகிறார் அதோ வருகிறார் என்று சர்க்கார் கெஜட்டுகள் அடிக்கடி கூறின! ரதகஜ துரக பதாதிகளின் இவ்வளவு வரவேற்புகளுக்கும் வாழ்த்தொலிகளுக்கும் ஆர்வ ஒலிகளுக்கும் அன்பான முழக்கங்களுக்குமிடையே வந்தார்—வந்தார்—ஆச்சாரியார் வந்தார்!

ஆம்! அவர் வந்தார்! உண்மையாகவே வந்தார்! அவர் கொலு வீற்றிருக்கும் தர்பார் மண்டபம் அமைந்துள்ள வடகோடி டெல்லியிலிருந்து தென்கோடி திருவண்ணாமலைக்கு அவசர அவசரமாக வந்தார்! அறிஞர்—பேரறிஞர்—ஒப்பற்ற பேரறிஞர்—ஈடும் எடுப்பும் அற்ற, தனக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்ற பேரறிஞர்—உவமானத்திற்குக் கூட வேறு ஒருவரை இணைகாட்டமுடியாத அவ்வளவு உயர்ந்த பெரும் பேரறிஞர் என்றெல்லாம் ஒரு சிறு கூட்டம் போற்றிப் போற்றிப் புகழ்ந்து புகழ்ந்து உயர்த்தி உயர்த்தி எழுதி எழுதிக் காட்டுகின்றதே, அவர்தான், அவரேதான், அந்தப் "பேரறிவாளர்" தான் வந்தார்!

இத்தகைய "இணையற்ற அறிவாளி" வந்தாரே, வந்தென்ன செய்தார்?

செயற்கரிய காரியம் ஏதேனும் செய்தாரா? இல்லை!

பிற அறிஞர்கள் எல்லாம் கண்டு கண்டு பொறாமைப் பட்டு மனம் புழுங்கிச் சாக வேண்டிய பெருமை மிகு உயர் பணி ஏதேனும் புரிந்தாரா? இல்லை!

ஒப்பற்ற அறிவாளி என்று

புகழப்படுகின்ற தன் கீர்த்திக்கு ஏற்ற, இந்தியாவின் புகழை அகில உலகிலும் பரப்பத்தக்க, அரும் பெரும் செயல் எதையேனும் செய்து முடித்தனரா? இல்லை!

தமிழகத்தின் தவப் பெரும் செல்வர் என்று சொல்கிறார்களே, ஆம் அது உண்மை என்று நாம் கூறுவதற்கேற்றபடி, தமிழகத்தின் பெயர் இந்தியா எங்கணும் ஒலிப்பதற்குத் தக்க வண்ணம், ஈடு இணையற்ற காரியம் ஏதேனும் ஆற்றினரா?

இல்லை!

இல்லை!!

இல்லை!!!

**இல்லை!!!!**

பிறகு என்னதான் செய்தார் இந்தப் பேரறிவாளர் என்கிறீர்களா? சொல்கிறோம் கேண்மின். திருவண்ணாமலையிலே உள்ள ஒரு கோவில், ஒரு மூலையில், ஒரு சிறு குகை இருக்கிறது—ஏழடி உயரமும் மூன்றடி அகலமும் உள்ள குகை! வௌவாலும் தூறிஞ்சிலும் கரையானும் கரப்பானும் எம் சொந்த சொத்து இது என்று 'ரிஜிஸ்டர்' செய்து வைத்துக் கொண்டிருக்கும் ஒரு பாழடைந்த இடம்! இருள் நிறைந்த பள்ளம்! நாம் சென்றால் நம் மூக்கை இறுகப் பிடித்துக் கொண்டு உடனே வெளியே ஓடி வந்துவிட வேண்டிய "நறுமணம்" ததும்பிய நல்லதோர் குகை! அந்த இருட்டுக் குகையைத் **திறந்து வைத்தார்** இந்த இணையற்ற அறிஞர்! இந்த மாபெரும் காரியத்தைப் புரிவதற்குத்தான் இந்த ஒப்பற்ற அறிஞர்திலகம் ஓடோடி வந்திருக்கிறார் ஓராயிரம் மைல்களைத் தாண்டி! மதத்தின் பெயரால் ஊரார் பணத்தை யெல்லாம் சுரண்டி தன் வீட்டார் பெயருக்கு எழுதி வைத்திருக்கிறார் "உலகப்பற்றேற்" இல்லாத ஒருவர்! அவர் எப்போதோ ஒரு காலத்தில், எதற்காகவோ சில நாட்கள், ஏனோ தெரியவில்லை, தன் வீட்டாரிடம் கோபித்துக் கொண்டு, எப்படியோ இந்தக் குகையின் துர்நாற்றத்தையும் வௌவால் தூறிஞ்சில் வாடையையும் சகித்துக் கொண்டு இங்குத் தங்கி யிருந்தாராம்! எனவேதான் இந்த இணையில்லாத அறிஞர் இந்த ஈடில்லாத செயலைப் புரிய வந்தாராம்! அடடாவோ அடடா! எவ்வளவு அற்புதமான பணியை ஆற்ற வந்திருக்கிறார் அகில இந்தியாவிலேயே தனக்கு இணை ஈடு யாரும் அற்றவர் என்று புகழப்படும் பேரறிவு படைத்த பெருங்குண சித்தர்!

இளைஞர்தம் கல்வியறிவை வளர்த்து வருங்காலப் பிரஜைகளை உருவாக்கும் உயர்பணியை ஆற்றும் நல்ல கல்லூரி ஒன்றைத் திறந்துவைக்க வந்திருக்கலாம்; அல்லது, தமிழகத்தின் சிறப்பை அகில உலகிலும் பரவச் செய்யும் அற்புத ஆராய்ச்சிகள் நிகழக்கூடிய அரிய விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை அமைத்து, அதைத் தொடங்கிவைக்க வந்திருக்கலாம்; அல்லது, கூட்டுப் பண்ணை முறையை ஏதேனும் ஒரு மாவட்டத்தில் தொடங்கி, அதன்மூலம் உணவு உற்பத்தியும் பொருட்செல்வமும் பெருகும் என்ற சிறந்த உண்மையை உழவர் கூட்டத்தவர்க்கு எடுத்துக்காட்ட வந்திருக்கலாம்; அல்லது வேற்று நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து நம் பணத்தை வீணாகப் பிறருக்குக் கொட்டி அழுகின்ற ஏதேனும் சில பொருள்களை இங்கேயே உற்பத்தி செய்வதற்கான புதிய மோட்டார் தொழிற்சாலையைத் திறந்துவைக்க வந்திருக்கலாம் அல்லது வீரத் தமிழன் கணபதியை மலாய்காட்டு சுல்தானின் தூக்கு மரத்திலிருந்து காப்பாற்றத் தவறிய தங்கள் சர்க்காரின் அலட்சியப் போக்கையும் ஏமாளித்தனத்தையும் எடுத்துக் காட்டும் ஏதேனும் ஒரு பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவாவது வந்திருக்கலாம்! இப்படி ஏதேனும் ஒரு நல்ல, உருவான, பயன்தரத்தக்க, நாட்டு நலத்திற்கு ஏற்ற, தமிழகத்தின் வளத்தையும் பெயரையும் சிறப்புறச் செய்யும் அரும்பணி ஒன்றைப் புரிந்திருக்கலாம் — புரிந்திருக்கவேண்டும் — புரிந்திருந்தால்தான், ஆச்சாரியார் அவர்களை ஓர் ஒப்பற்ற அறிவாளர் என்று கூறுகிறார்களே சிலர் அதை அறிஞர்கள் ஒப்பமுடியும். ஆனால் எங்கோ உள்ள டில்லியிலிருந்து இங்கே உள்ள தமிழகத்திற்கு ஓடோடிவந்த ஆச்சாரியார் அவர்களோ இவைபோன்ற நற்பெரும்பணி ஏதும் புரிந்தன்றில்லை — வௌவால் வாழுமிடம் ஒன்றைத் திறந்து வைத்துவிட்டு, பெருமையுடன் போகிறார்! சே! எவ்வளவு வெட்ககரமான சம்பவம்! ஒரு மகத்தான கவர்னர் ஜெனரல்—ஓர் ஒப்பற்ற அறிவாளி—ஓர் இணையற்ற தியாக புருஷர்—இந்தப் பெரிய உபகண்டத்திற்கே தலைமை அதிகாரி — தென்னாட்டின் மூளை என்று அழைக்கப்படும் பேரறிஞர், கடைசியில், இவ்வளவு வெட்ககரமான, இவ்வளவு சாதாரணமான, இவ்வளவு கேவலமான செயலைப் புரிவதற்குத்தானா பயன்படவேண்டும்! இந்தக் கேவலமான நிகழ்ச்சியைப் புரிய இந்த மாபெரும் அறிஞர் வந்தார் என்பதை எண்ணும்போதெல்லாம் நமக்கு வெட்கம் மட்டுமல்ல துக்கமும் ஏற்படுகிறது! இப்படிப்பட்ட உயர்ந்த அறிவு இவ்வளவு தூரம் பாழுக்கு இறைக்கப்படு

(10-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இழிதகை நிலைமைக்கு உள்ளாகிவிடும்!

இதை உணர்வதற்கு அப்படியொன்றும் பிரமாதமான அரசியல் அறிவோ, நுணுக்கமான ஆராய்ச்சித் திறமையோ, தெளிவான வரலாற்று உணர்ச்சியோ இருக்கத் தேவையில்லை, சாதாரணப் பொது அறிவு சுமாராக இருந்தாலே போதும், இந்த உண்மைகள் தெளிவாகத் தெரிந்துவிடும்.

இந்தப் பரந்த இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஒரே ஒரு சட்டசபையாலும் ஒரே ஒரு மந்திரி சபையாலும் ஒரே ஒரு சர்க்காராலும் ஆளப்பட்டு, அந்த மந்திரி சபை — சட்டசபை — சர்க்கார் மூன்றும் டில்லியிலே ஏற்படுத்தப்பட்டு, அவை மூன்றும் சமஸ்கிருத (தேவநாகரி) எழுத்தினைக் கொண்ட ஹிந்தியிலே நடைபெறுவது என்றும் ஆகிவிட்டால், பிறகு, தென்னிந்தியா, ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட, வடநாட்டில் உள்ள, சிறு கூட்டத்தாரின் கைப்பொம்மையாக ஆகிவிடும் என்பதை யார் மறுக்கமுடியும்?

இந்தியா ஒரு பெரிய உப கண்டம், சிறு நாடு அல்ல! இந்த உப கண்டத்தில் பல்வேறு இனத்தவர், தத்தமக்கென்று தனி மொழியும், தனித் தரணியும், தனிக் கலாச்சாரமும், தனி நாகரிகமும், தனியான வரலாறும் படைத்தவர்களாய், தனித்தனியே வாழ்கின்றனர். அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து ஒரே நாட்டவர் என்றோ, ஒரு இனத்தவர் என்றோ கூறுவது எந்த நல்லறிவாளரும் ஒப்புக்கொள்ள முடியாத ஒரு பொய்! இந்தியா, பல நாடுகள் கொண்ட ஒரு தொகுப்பு! ஒரே நாடு அல்ல! எனவே இந்தியாவுக்கு ஒரு பொது சர்க்கார் இருக்கவேண்டுமானால், அந்தப் பொது சர்க்காரும் தடுமாற்றம் ஏதுமின்றி நீடித்த காலம் நிலைத்துநிற்கும் நல்வாழ்வினைப் பெறவேண்டுமானால், அந்த சர்க்கார், இந்தப் பல்வேறு நாடுகளின் (அல்லது கிளை நாடுகளின்) முழுத் திருப்தியும் பரிபூரண சம்மதமும் கொண்டதாக இருக்கவேண்டும். அதோடு இந்தப் பல்வேறு நாடுகளின் சொந்த சுயேச்சையையும், உள்நாட்டு ஆட்சி உரிமையையும் இம்மியளவும் பறிக்காததாக இருக்கவேண்டும் அந்தப் பொது சர்க்கார்! மேலும், இந்த நாடுகளில் ஏதுவும் எப்போது வேண்டுமானாலும் 'பொது சர்க்கார்' என்ற கூட்டாட்சியைவிட்டு விலகிச் சென்று முழுக்க முழுக்க தனி வாழ்வு செலுத்தும் உரிமையும் பெற்றிருக்கவேண்டும். இவ்வளவும் இருந்தால்தான், பொது சர்க்கார் என்னும் அமைப்பு, நீடித்தும் நிற்கும். நல்ல பயன் விளைப்பதாகவும் இருக்கும். இல்லையேல் நீர்மேல் குமிழி, அந்தப் பொது சர்க்காரின் வாழ்வு! நிமிஷத்தில் தோன்றி நிமிஷத்தில் மறைந்துபோகும்!

பொது சர்க்கார் அல்லது கூட்டு சர்க்கார் அல்லது கூட்டு ஆட்சி அல்லது மத்திய சர்க்கார் என்று கூறப்படுகிற ஆட்சி அமைப்பு இருக்கிறதே அது ஒரு பலூன், போன்றது. பலூனை வாயில் வைத்து, காற்றை உள்ளே ஊதிக்கொண்டே இருந்தால், பலூன் வடிவத்தில் வளர்ந்துகொண்டே இருக்கும். ஆனால் அதன் வடிவத்தின் வளர்ச்சிக்கு ஒரு எல்லை உண்டு. அந்த எல்லை வரையில்தான் பலூனுக்குள் காற்றை ஊதி, நாம், அதன் வடிவத்தைப் பெருக்க வைக்கலாம். அந்த எல்லையை அடைந்தபிறகும், நாம், பலூனுக்குள் காற்றை ஊதினால், பலூன், பட்டென்று உடைந்துபோகும். பிறகு பலூன், பலூன் அல்ல! கிழிந்துபோன வெறும் ரப்பர் துண்டு—குப்பைத் தொட்டியே, பிறகு, அதற்கு வாழுமிடம்! ஒரு பொது சர்க்காரும், இப்படித்தான், அதன் வளர்ச்சிக்கு, ஒரு எல்லையைக் கொண்டிருக்கிறது. அந்த எல்லையை மீறி தன் கிளை நாடுகளின் உரிமையைப் பறிக்க அது எண்ணுமானால் அந்தப் பொது சர்க்காரே உடைந்துபோய்விடும். பிறகு, கிளைநாடுகள், புரட்சி செய்து, புது வாழ்வு வாழத் தனி வாழ்வு தொடங்கிவிடும் நிலை ஏற்பட்டுவிடும்.

இப்போது **டாக்டர் பஞ்சாபராவ் தேஷ்முக்** கொண்டுவந்துள்ள தீர்மானம் உண்மையிலேயே, இந்திய சர்க்கார் என்ற பொது அமைப்பையே தகர்த்தெறியத்தான் வேண்டும் என்ற ஆவேசப் புயலை, மாகாணங்கள் என்று தவறாக அழைக்கப்படும் பல்வேறு இந்திய நாடுகளில் வாழும் மக்கள் மனதிலே எழுப்பிவிடும்; ஆம்! நிச்சயம்! தீர்மானம் மட்டும் நிறைவேறுமானால், பிறகு, இந்தியா என்ற பெயரைக்கூட பூகோளப் படத்திலே காணமுடியாது! வங்காளம், குஜராத், பஞ்சாப், சீக்கிஸ்தான், திராவிட நாடென்று தனித் தனி நாடுகளின் பெயர்கள் விரைவில் படததில் பொறிக்கப்படும் நிலை உண்டாகிவிடும்!

"நாளாக ஆக, மாகாண சர்க்கார்களின் ஒத்துழைப்பை, மத்திய சர்க்கார் பெறுவது என்பது மிக மிகக் கடினமான பிரச்சினையாக மாறிக்கொண்டே வருகிறது. இதோடு, மொழிவழி மாகாணப் பிரிவினைக் கிளர்ச்சியின் காரணமாகவும் மத்திய சர்க்காரின் பலம் குறைந்து வருகிறது. தினம் தினம், வேற்றுமை உணர்ச்சிகள் வளர்ந்துகொண்டே போவதோடு முன்னர் இருந்துவந்த பரஸ்பர ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் வேகமாக மறைந்து வருகிறது. இந்த நிலைமை நீடிக்குமானால் இந்திய சர்க்காரின் எதிர் காலம் இருள் மிகுந்ததாக ஆகிவிடும். எனவேதான் இந்தத் தவறான சூழ்நிலையை அழித்து, 'ஏக இந்தியா' உணர்ச்சியை ஊட்ட, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன்" என்று **டாக்டர் பஞ்சாபராவ் தேஷ்முக்**, தன் தீர்மானத்தை விளக்குகையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் நாம் திட்டவட்டமாகவே குறிப்பிட ஆசைப்படுகிறோம், எந்த அகில இந்திய ஒற்றுமையை இந்தத் தீர்மானம் போற்றி வளர்க்கும் என்று டாக்டர் தேஷ்முக் கருதுகிறாரோ, அந்த ஒற்றுமையை என்றென்றும் மீண்டும் தலைகாட்ட முடியாதபடி கல்லறைக்கு அனுப்பிவிடும் சவப்பெட்டியேதான் இந்தத் தீர்மானம்!

என்னவென்று கருதிக் கொண்டிருக்கிறார் டாக்டர் தேஷ்முக்? மாகாண சட்டசபைகள் யாவும் கலைக்கப்பட்டு டில்லி ஏகாதிபத்தியம் தன் கொடுங்கோலாட்சியைத் தீவிரமாக நடத்தத் தொடங்கினால், மக்கள், குறிப்பாகத் தென்னிந்திய மக்கள், கண்மூடி மௌனிகளாக இருந்து விடுவார்கள் என்று எண்ணுகிறார் தேஷ்முக்? புயல்—புரட்சிப் புயல்—ஆயிரமாயிரம் தேஷ்முக்குகள் லட்சோபி லட்சம் தீர்மானங்களுடன் ஓடோடி வந்தாலும் தடுக்கமுடியாத மக்கட் புயல் சுழன்று சுழன்று வீசும்; அந்த சூறாவளியிலே இந்திய சர்க்கா சுக்கு நூறாகிவிடும்; இனவு

அமைந்த சர்க்கார்கள் தனித்தனியே ஏற்படும்; வர்க்கத்துக்கோர் வட்டாரம் என்ற மொழி நாட்டு நிலை ஆகிவிடும்—தேஷ்முக் இதனை அறியட்டும்! டில்லி சர்க்காருக்கும் இதனை அறிவிக்கட்டும்!!

வடநாட்டு ஏகாதிபத்திய வெறி உணர்ச்சி—இந்தியா முழுவதையும் தம் சிறுகரத்திலே நசுக்கி வைத்து ஆளவேண்டும் என்ற தீய நினைப்பு—வடநாட்டாரிடம் எவ்வளவு தீவிரமாகப் பரவி வருகிறது என்பதற்கு டாக்டர் தேஷ்முக்கின் தீர்மானம், ஒரு மறுக்க முடியாத எடுத்துக்காட்டு! தென்னாடாவது வடநாடாவது என்று சப்புக்கொட்டுகிறார்களே தென்னாட்டுக் காங்கிரஸ் அதிமேதாவிகள், திராவிடஸ்தான் கோரிக்கை குறுகிய புத்திக்காரர்கள் கூக்குரல் என்று குள்ளமனத்தாலே கொக்கரிக்கிறார்களே காமராஜர்கள், தென்னாடு தனி நாடாவதா—ஒப்பேன் ஒப்பேன் என்று ஒப்பாரி வைத்தழுகிறார்களே ஓய்வாக இருந்து சிந்திக்கத் தெரியாத ஓமந்தூரார்கள், இன்பத் திராவிடமா—சீச்சீ இதென்ன பேச்சு என்று மீசையை முறுக்கி அர்த்தமற்ற அடுக்குச் சொற்களை அள்ளி வீசுகிறார்களே அறுவசியமாக சிவஞான கிராமணிகள், இவர்கள் அத்தனை பேரும் அறிந்து கொள்ளட்டும், வடநாட்டில் பஞ்சாபராவ் தேஷ்முக்குகளின் தொகை நினைத்துப் பார்த்தால் நாம் நடுங்கவேண்டிய அளவுக்கு, வேகமாக வளர்ந்து வருகிறது! ஆதிக்க ஆசைகொண்டு, அகில இந்தியாவையும் கட்டி ஆளவேண்டும் என்று கதறித் திரிகின்ற பஞ்சாபராவ் தேஷ்முக்குகள் கொஞ்சமல்ல இன்று வடநாட்டில்! அவர்களின் உள்ளத்தைத் திருத்தி அமைத்து, அங்கே உறைந்து நிற்கும் ஏகாதிபத்திய எண்ணத்தைக் கல்லி எறிந்து, சமதர்ம எண்ணத்தையும், வர்க்கத்துக்கோர் வட்டாரம் என்ற சீரிய கொள்கையை ஒப்புக்கொள்ளும் சிறந்த அறிவையும் அங்கே ஊன்றுவது என்பது இனி நடவாத செயல்! எப்படி நாய் வாலை நிமிர்த்துவது நடவாத செயலோ, எப்படி சுடுகாட்டுக்குப் போன பிணத்தை மீண்டும் நடமாட வைப்பது ஆகாத காரியமோ, எப்படி பழமைப் பித்திலே ஊறித் திளைத்த சங்கராச்சாரிகளை புரட்சித் தலைவர்களாக மாற்றி அமைப்பது முடியாத வேலையோ, அப்படித்தான், ஏகாதிபத்திய வெறி உணர்ச்சி படைத்தவர்களாக மாறிவிட்ட பஞ்சாபராவ் தேஷ்முக்குகளை இனி இந்தியாவில் உள்ள பல்வேறு இனத்தவர்களுக்குத் தனித்தனி நாடும், வாழும் வழியும், வழி அமைக்கும் உரிமையும் தர ஒப்புக்கொள்ளும் நற்குணம் படைத்த நல்லறிவாளர்களாக மாற்றி அமைப்பதும் இயலாத பணி என்பதை எவரும் ஒப்புவர். எனவே நாம்; தேஷ்முக்குகளின் விஷவாடை நம்மீது பட்டு, நம் நலத்திற்கு ஊறு விளையாவண்ணம் இருக்கும்படி நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் அதற்குள்ள ஒரே ஒரு வழி, அந்த விஷ வாடை பரவாதபடி நம் சொந்த நாட்டைச் சுற்றி ஒரு தடுப்புச் சுவர் எழுப்புவதுதான்! அதாவது தனிவாழ்வு செலுத்தும் சுதந்தரத் திராவிடம் அமைப்பதுதான்! ஒரே வார்த்தையில் இந்த மகத்தான உண்மையைச் சுருக்கமாகச் சொல்வதானால் திராவிட நாடு திராவிடருக்கே ஆகவேண்டும்! ஆனால்தான் தேஷ்முக்குகளின் விஷ வாடை இங்கு பரவாது இருக்கும்; சமதர்ம நல்வாழ்வும் நமக்குக் கிட்டும். தென்னாட்டுச் தேசீயத் தோழர்கள் இதை ஒப்புக்கொள்ளத்தான் போகிறார்கள்—இன்றில்லாவிட்டால் நாளை! நாளை தவறினால் மற்றுமோர் நாள்! மதிப்பிற்குரிய நம் காங்கிரஸ் நண்பர்கள் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை ஒப்புக் கொள்ளப் போகிறார்களா இல்லையா என்பதல்ல இன்றைய பிரச்சினை—அவர்கள் ஒப்புக்கொள்ளத்தான் போகிறார்கள் என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை—ஆனால் ஒப்புக்கொள்வது என்றைக்கு என்பதுதான் பிரச்சினை. எவ்வளவு விரைவில் ஒப்புக்கொள்கிறார்களோ அவ்வளவு விரைவில் நம் நாடு — தென்னாடு—திரவிட நல் திருநாடு சுதந்தர சோஷலிசக் குடியரசு நாடாகும். விரைவில் அவர்கள் ஒப்புக்கொள்ளத் தவறினால், வடநாட்டு ஏகாதிபத்தியம் விரித்துவரும் வலையிலிருந்து நாம் தப்பி வெளியேறுவது மிகவும் கடினமானதோர் பிரச்சினையாக மாறிவிடும். பஞ்சாபராவ்தேஷ்முக் ஓர் அபாய அறிகுறி! அந்த அபாய அறிவிப்பின் முழுப் பொருளையும் உணர வாருங்கள் என்று நாம் திராவிட நாட்டுக் காங்கிரஸ் திராவிடர்களை அன்புடனும் பணிவுடனும் அழைக்கிறோம். உணரவருவார்களா?

———

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

"வெட்டுண்ட காயம் மறைந்து போவது மாயம்தானே?"

"மாயமுமில்லை மந்திரமுமில்லை! மூலிகைகளின் சக்தி தம்பி, சக்தி! இதன் அபூர்வ ஆற்றலை விளக்குவதற்காகவே உன் கரலை நான் துண்டித்தேன்! வெட்டிப் பிரித்த இரு பாகங்களை ஒன்றாக—அதுவும் சிறிது நேரத்தில்—சேர்த்து முன் போலாக்கும் அதிசய சக்தி படைத்த மூலிகைகள் தமிழ் நாட்டுக் காடுகளில் உள்ளன! இதனை ஒரு சிலரே அறிந்திருந்தார்கள். அறிந்தவர்களில் பெரும்பாலோர் அவற்றை மற்றவர்களுக்குத் தங்களின் சின்ன புத்தியின் காரணமாகக் காட்டாமலேயே மண்ணோடு மண்ணாக மறைந்துவிட்டார்கள். ஒருவர் இருவர் தங்களுக்கு மிகவும் வேண்டிய, அதுவும் தங்களுக்கு பணிவான அடக்கமானவர்களுக்கு மட்டும் காட்டினார்கள். இப்படியே மறைத்து மறைத்து. மூலிகைகளின் சக்தியை அறிந்து மக்களின் நலத்திற்காகப் பயன்படுத்தும் வைத்தியமுறையைப் பாழ்படுத்தி விட்டார்கள். மூன்று மண்டையோடுகளைப் பார்த்தாய் அல்லவா! அவற்றுள் சிற்பியின் மண்டையோட்டையும் [illegible]டினேனே நினைவிருக்கிறதா? [illegible] சிற்பிதான் இந்த மூலிகைகளையும், இந்த மரத்தின் பாலையும் எனக்குக் காட்டி இவற்றின் பயனை விளக்கிக் கூறினார்! நீ கேட்டது போலவே, நானும் அவற்றின் பெயரைக் கேட்டேன். பாபம், அவருக்கு அவற்றைக் காட்டியவர் பெயரைப் [illegible] கூறுவதாகச் சொன்னாராம். ஆனால் பிறகு அந்த ஆளைச் சிற்பி பார்க்கவே முடியாமல் போய் விட்டதாம்! மற்றவனுக்குச் சொன்னால் அவன் எங்கே பேரும் புகழும் தன்னைப் போல பெற்று விடுகிறானோ என்ற அச்ச உணர்ச்சியினாலும், மட்டரக மனப்பான்மையினாலும் தமிழனின் எவ்வளவோ கலைகள் மறைந்து விட்டன, மறைந்து கொண்டே வருகின்றன!............" கிழவன் இப்படி தமிழ் நாட்டிலிருந்து அழிந்தொழிந்துபோன சிலவற்றைக் குறித்துக் கூறினான். துய

மணி மிகவும் கவனத்தோடு அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

வெட்டுண்ட காயத்தை நொடி நேரத்தில் ஆற்றும் மூலிகையையும், இழந்த பலத்தைப் பெற உதவும் மரப் பாலையும் கிழவன், தூயமணிக்குக் காட்டிவிட்டு, அவனைத் திரும்பவும் குகை இல்லத்திற்குள்ளாகவே அழைத்துச் சென்றான்.

அங்கே ஓர் அறைக்குள இருவரும் நுழைந்தார்கள். அந்த அறையில் ஒரு பெரிய முத்துக்குவியல் இருந்தது! தூயமணி, முத்துக்களை அள்ளிப் பார்த்தான். "நல்ல முத்துக்கள்தான், தம்பி" என்று கிழவன் கூறினதும், "இவ்வளவு பெரிய முத்துக்குவியல் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?" என்று வீரன் கேட்டான்.

புன்னகை செய்துவிட்டு, கிழவன் பேச ஆரம்பித்தான்.

"கொள்ளையடித்தேன்!"

"சரிதான், நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது!"

"என்னப்பா நீ நினைத்தாய்?"

"இல்லாவிட்டால் இவ்வளவு பெரிய முத்துக்குவியல் எங்கிருந்து உங்களுக்குக் கிடைக்கப்போகிறது?"

"கொள்ளை யடித்தேன்! வழி மறைத்து கொள்ளை யிட்டேன்! யாரை? ஒரு கொள்ளைக் கூட்டத்தை?"

"கொள்ளைக் கூட்டத்தையா?"

"ஆமாம்! கொள்ளைக் கூட்டம் தான்! ஆரியக் கூட்டத்திலிருந்து பறித்த முத்துக்குவியல் இது? இவ்வளவையும் அவர்கள் கொள்ளையடித்துக்கொண்டு வருவதை நான் பார்த்தேன்........."

"புதுமையாகப் பேசுகிறீர்களே? ஆரியக் கூட்டமா கொள்ளைக் கூட்டம்? தமிழ் மன்னர்களின் வாழ்வு உயீரவும், தமிழ் மக்கள் நல்வாழ்வு பெறவும், பொன்னாடு தழைத்தோங்கவும் அல்லும் பகலும் யாக குண்டத்தின் முன் உட்கார்ந்து வேதம் ஓதும் அந்த விற்பனர்களா கொள்ளைக்காரர்கள்?"

"ஆரிய மாயையில் நன்றாக நீ சிக்கியிருக்கிறாய்! அந்த மாயையிலிருந்து நீ விடுபட, உன்போதை தெளிய, நான் அதிகமாகச் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது! சரி, என் இனத்தான் வாழ, நல்லறிவுபெற இதனையாவது நான் செய்யாவிட்டால்..."

"ஆரியக் கூட்டம் கொள்ளை அடித்துக் கொண்டு வந்தார்கள் என்று கூறினீரே, எங்கிருந்து திருடிக்கொண்டு வந்தார்கள்?"

"பாண்டியனிடம் சென்று, ஏதேதோ கூறி, அவன் மனத்தைக் குழப்பி, வஞ்சகமாக எதை எதையோ காட்டி அவனை வலையில் சிக்கவைத்தனர். அவனோர் முட்டாள், உள்ளம் பெருத்து உவகையோடு இவ்வளவு பெரிய முத்துக்குவியலை ஆரியர்களுக்கு வெகுமதியாகத் தந்தான். பெற்றுக்கொண்டு, சேரனிடம் காட்டி இன்னும் அதனைவிட அதிக அளவு பரிசுபெற பூரிப்போடு பூசுரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். செய்தியை அறிந்தேன். காட்டில் மடக்கினேன். நான் ஒரே ஒருவன் அவர்களை விரட்டி யடித்தேன்! இதனைப் பெறறேன்!"

என்று கூறி கிழவன், தூயமணியின் முதுகில் தட்டித் தந்தார் பெருமிதத்தோடு.

இருவரும் அறையை விட்டு வெளி வந்தார்கள். வளைவான ஒரு வழியில் சென்றார்கள். அங்கு ஒரே இருட்டாக இருந்தது. அந்த இருட்டில் நடந்து கொண்டு செல்லும் போது இருவர் பேசும் குரல் அவர்களின் காதில் நன்றாக விழுந்தது. தூயமணி அந்தக் குரலை மிகவும் நுணுக்கமாக உற்றுக் கேட்டான்.

"ஐயா, இது யார் பேசுவது?"

"ஒரு வாலிபனும், ஒரு கன்னியும்?"

"வாலிபனும் கன்னியுமா?"

"ஆமாம்!"

"அந்தப் பெண்ணின் குரல் நான் எங்கோ கேட்ட குரல் போல் தெரிகிறதே!"

"ஆம், கேட்டிருப்பாய்! நிறைய கேட்டிருப்பாய்!"

"அவள் யார்?"

"முத்துக் குவியலைப் பரிசாகப் பெறப் போகிறவள்!"

"விளக்கமாகச் சொல்லுங்களேன்!"

"அதற்குள் அவர்கள் இருட்டை விட்டு வெளியே வந்தார்கள். அங்கே ஒரு மேடையின் மீது ஒரு வாலிபனும் ஒரு இளம் பெண்ணும் உட்கார்ந்திருந்தனர்! கிழவனும் வீரனும் வரும் காலடிச் சப்தத்தைக் கேட்டதும் அந்தப் பெண் எழுந்து வேகமாக ஓடிவிட்டாள்!

பெண்ணின் பின் புறத்தை மட்டுமே தூயமணி பார்த்ததினால், அவள் யார் என்பதை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை.

வாலிபன், அவர்கள் இருவரையும் வரவேற்றான்.

'தம்பி, இவன் தான் என் மகன்!" என்று அந்த வாலிபனைச் சுட்டிக் காட்டி கிழவன் கூறினான்.

வாலிபன் வணக்கம் செய்தான். தூயமணியும் பதிலுக்கு வணக்கம் தெரிவித்தான். "அந்தப் பெண் யார்? இந்தக் கேள்வி அவன் உள்ளத்தில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது!

(தொடரும்)

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மானால் யாருக்குத்தான் துக்கம் பிறக்காமல் இருக்கும்! பன்னீர்—உயர்ந்த பொருள்! தலைமீது தெளிக்கலாம்! ஆனால் அதைச் சாக்கடைமீது தெளித்தால்...! அதுவும் அப்படிச் செய்பவர் ஒப்பற்ற அறிவாளியாகவும் இருந்தால்...! நமக்குத் துக்கமும் வெட்கமும் ஒருங்கே தோன்றாமலா இருக்கும்! நாம் என்ன மரக்கட்டைகளா துக்கமும் வெட்கமும் அடையாமல் இருக்க!

**வந்தாரய்யா வந்தார்!**
**ஆச்சாரியார் வந்தார்!**
**வீராதி வீரர் வந்தார்!**
**வௌவால் குகையைத் திறந்தார்!**

என்று மக்கள் பாடுகிறார்கள்! அந்தப் பாட்டைக் கேட்கும் போதெல்லாம் நமக்கு என்னவோபோல் இருக்கிறது! நமக்கும் சேர்த்துத்தானே அவர் கவர்னர்ஜெனரலாக இருக்கிறார்!

---

**ஏஜண்டுகள் தேவை:**
**தஞ்சாவூருக்கு**
பிரதிக்கு 12 அணா வீதம் முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டு உடனே தேவை.
மேனேஜர், போர்வாள்.




தொடர்கதை:

மூன்றும் பகுதி

## முத்துக் குவியல்

வெட்டுண்ட காலை கையில் வைத்துக்கொண்டிருந்த கிழவன், தூயமணியின் முகத்தை உற்றுப் பார்த்தான். சோர்ந்து நினைவிழந்து அவன் கிடந்தான். கீழே காலை வைத்துவிட்டு கிழவன், அவ்விடத்தைவிட்டு மிக வேகமாக வெளியே ஓடி, அதிவிரைவில் கையில் ஒரு கிண்ணத்தோடு திரும்பி வந்தான். கிண்ணத்திலிருந்த ஏதோ ஒரு வெண்நிறமான குழம்பை எடுத்து வெட்டுண்ட இடத்தில் திருப்பத் திரும்பப் பூசினான்.

முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு, தூயமணியைத் தூக்கி முதுகில் சாய்த்துக் கொண்டு, அந்த இடத்தைவிட்டு சிறிது தூரம் குகையில்லத்திற்கு வெளியே சென்றான். அங்கோர் பாறையின்மீது தூயமணியைப் படுக்க வைத்துவிட்டு, அவனருகே வெட்டுண்ட காலையும் வைத்துவிட்டு அவன் சிரித்தான். அடுத்திருந்த செடிகளின் அருகே சென்று, அவற்றிலிருந்து இலைகளைப் பறித்துக்கொண்ட பிறகு பிணம்போல் கிடந்த தூயமணியின் அருகே வந்தான்.

வெட்டுண்ட காலை, துண்டிக்கப்பட்ட இடத்தில் பொருத்தி, அதனைச் சுற்றிலும் அந்த இலைகளை வைத்து, தன் மேல்துணியினால் இறுகக் கட்டினான். சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்துவிட்டு, பிறகு எழுந்து குகையில்லத்திற்குள் சென்று, ஒரு குவளையில் தண்ணீரோடு அவ்விடத்திற்கு வந்தான்.

தூயமணியின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தான். வீரனின் கைகால்கள் சிறிது அசைந்தன. கிழவன், அவன் காலிலிருந்த கட்டை அவிழ்த்துவிட்டு, தட்டி எழுப்பினான்.

தூங்கி விழித்தவனைப் போல தூயமணி எழுந்து உட்கார்ந்தான். கிழவனைப் பார்த்ததும் ஆத்திரமும் அழுகையும் அவனுக்குப் பீறிட்டுக் கொண்டு வந்தன.

"ஐயா, என் காலை வெட்டி விட்டீர்களே இது தகுமா? இந்த இளம் வயதிலே இக் கதிக்கு என்னை ஆளாக்கவா இங்கு அழைத்து வந்தீர்?" என்று கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு, தூயமணி வினவினான்.

கிழவன் பதிலொன்றும் கூறாது, அவனைப் பார்த்துச் சிரித்தான்.

"சிரிக்கிறாய்! சிரித்துச் சிரித்து தானே என்னை மயக்கி, சேரநாட்டின் வளமான சோலைகளில் சுற்றித் திரிய முடியாத நிலைக்கு என்னைக் கொண்டுவந்து விட்டீர்!"

"தம்பி, ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன அப்படி நேர்ந்து விட்டது?"

"என்ன நேர்ந்து விட்டதா? கல் நெஞ்சம் கொண்டவரே......என் காலை வெட்டிவிட்ட நீங்களா இப்படிக் கேட்கிறீர்?"

"உன் காலை வெட்டினேனா? யார்? நானா?"

"என்னய்யா வெட்டியதும் வெட்டிவிட்டு, வேடிக்கையாகவும் பேசுகிறீர்?"

"எங்கே தம்பி வெட்டினேன்?"

"இதோ பாருங்கள்" என்று கூறிக்கொண்டே வெட்டுண்ட இடத்தைக் கிழவனுக்குக் காட்டிக் கொண்டே பார்த்தான்! அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. அந்த இடத்தைத் தடவிப் பார்த்தான்! கால் வெட்டுண்ட சிறுவடுகூட தென்படவில்லை! ஆம், கால் முன்போலவே நல்ல நிலையில் இருந்தது! "ஆ! கால் இருக்கிறது! நான் நொண்டியல்ல!......" என்று பெருமகிழ்ச்சியோடு கூவினான். துள்ளிக் குதித்து ஓட முயற்சித்தான். கிழவன் அவனை அழுத்தி உட்காரவைத்து, "மணி, எழுந்திருக்காதே, விழுந்து விடுவாய்! ரத்தம் உன் உடலிலிருந்து அதிகமாகச் சேதமாகியிருக்கிறது! இதோ, சிறிது நேரத்தில் பால் கொண்டுவந்து தருகிறேன், அதனைப் பருகியபிறகு எழுந்திரு—முன்போல் உன் உடலில் தென்பும் பலமுமிருக்கும்!" என்று சொல்லிவிட்டு கிழவன் அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

வீரனுக்கு எல்லாம் ஒரே வியப்பாகவே இருந்தது. "நாம் என்ன கனவு காண்கிறோமா? அல்லது தேவலோகம் நரகலோகம் என்றெல்லாம் கூறுகிறார்களே, அந்த லோகங்களில் ஏதாவது ஒன்றிற்கு வந்துவிட்டோமா? இதென்ன ஒரே மாயமும்! அதிசயமும்!" என்று அவன் தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

ஒரு கிண்ணத்தில் பாலோடு கிழவன் அங்குவந்து சேர்ந்தான். அவன் தந்ததைக் கண்மூடிக் கொண்டு தூயமணி குடித்தான்.

"சிறிதுகூட சுவையாக இல்லையே! இதென்ன பால்?"

"மரப்பால்!"

"மரப்பாலா? எந்த மரப்பால்?"

"மரத்தின் பெயர் யாருக்குத் தெரியும் தம்பி? மரத்தை நான் அறிவேன், அதன் பாலின் பயனையும் அறிவேன்! பெயரை அறியேன்!"

"எல்லாம் மாயமாக இருக்கிறது!"

"மாயமா? ஆரியக் கொள்கை உன் உதிரத்தில் நன்றாக ஊறி விட்டதுபோல் தெரிகிறதே!"

"என் கால் வெட்டுண்டது..."

"உண்மை......"

"என் கால் பழையபடி நல்ல நிலைக்கு வந்து விட்டதே?"

"இதுவும் உண்மை!"

(9-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களை மட்டும் ஒழிக்கும் வேலைத் திட்டத்தைக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் சீமான்களை மட்டுமல்ல, சீமான்களைப் போற்றி வளர்க்கும் மத அபினை உற்பத்தி செய்து ஊருக்கெல்லாம் வழங்கும் உலுத்தத்தனம் மிகுந்த ரஸ்புட்டீன்களையும் ஒரு சேர எதிர்க்கிறோம். இந்த ஒரு வேற்றுமையைத் தவிர மற்றபடி இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கம்யூனிசத்திற்கும் எங்களுடைய கம்யூனிசத்திற்கும் வேறு எவ்வித வேற்றுமையும் இல்லை. கணித மொழியிலே கூறுவதானால் இந்தியக் கம்யூனிஸம்+புரோகித எதிர்ப்பு=திராவிடக் கழக கம்யூனிசம். அல்லது; திராவிடக் கழகக் கம்யூனிசம்—புரோகித எதிர்ப்பு=இந்தியக் கம்யூனிசம்.

**2. பிறர் செய்யும் நற்செயல்களை நழுவவிட்டு, அவர்கள் செய்யும் சில தீச்செயல்களை மட்டும் கூறி அவர்களை இகழ்தல் உமக்கு அழகாகுமோ? மாற்றுக் கட்சியினர் என்பதற்காக அவர்களை இகழ்தல் ஆகுமோ? ஏன் இந்த மந்த புத்தி உமக்கு?**

மன்னிக்கவேண்டும் நண்பரே, உம் கேள்வியிலே கோபம் கொப்பளிக்கும் அளவுக்கு அறிவுத் தெளிவு இல்லை. அதுமட்டுமல்ல, நீர் சுயமாகச் சிந்திக்கும் திறமை அற்றவர் என்பதும், யாரோ சொல்வார் பேச்சைக் கேட்டு இக் கேள்வியை எழுதி அனுப்பி இருக்கிறீர் என்பதும்கூட உம்முடைய இக் கேள்வியிலிருந்தே மிக நன்றாகத் தெரிகிறது. ஏன் தோழரே, நான் கூறுவது சரிதானே?

'பிற கட்சியினர் செய்யும் நற்செயல்களை நழுவவிட்டு, அவர்கள் செய்யும் சில தீச் செயல்களை மட்டும் கூறி அவர்களை இகழ்கிறோம்'' என்கிறீரே, இது முற்றிலும் தவறு. பிற கட்சியினர் நல்லன புரிந்தபோதெல்லாம் அவர்களைத் தழுவி மகிழ்ந்து பாராட்டுரை வழங்க நாங்கள் சிறிதும் தவறியதில்லை. காங்கிரஸ் கட்சியின் சர்க்கார், மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவந்த போது நாங்கள் சர்க்காரைத் தாக்கவில்லை—தாங்கினோம். அவர்கள், திருக்குறளைக் கட்டாய பாடமாக்கிய போதும் அவர்களை இகழவில்லை—புகழ்ந்து உரைத்தோம். ஜமீன் ஒழிப்புத் திட்டத்தை அவர்கள் கொண்டுவந்த போதும் நாங்கள் சர்க்காரை எதிர்க்கவில்லை—ஆதரித்தோம் — ஆதரவை அமோகமான அளவுக்கு அவர்களுக்கு நாட்டில் திரட்டியும் தந்தோம். வகுப்புவாரிப் பிரதிநிதித்வ உத்தரவை அமுலில் தொடர்ந்து நடத்த முடிவு செய்தபோதும் பாராட்டினோம்—புறம் கூறினோமில்லை. மடாலயத் திருத்த மசோதாவை சர்க்கார் கொண்டு வந்தபோது, அதை காங்கிரஸ் வைத்திய நாதர்களே கச்சை கட்டிக்கொண்டு எதிர்த்தனர் என்றாலும், நாங்கள் எதிர்த்தோமில்லை, மனப்பூர்வமான ஆதரவை மகிழ்ச்சியுடன் வழங்கினோம். பட்டிதொட்டியெல்லாம் சென்று பிரசாரம் புரிந்து, அந்த மசோதாவின் இன்றியமையாமையை மக்களுக்கெல்லாம் எடுத்துக்கூறி சர்க்காரை முற்றிலும் ஆதரித்தோம். ஆனால் அதே சமயத்தில் கட்டாய இந்தி, கவைக்குதவாத கதர், ஆதாரம் இல்லாத ஆதாரக் கல்வி, இராவண காவியத் தடை என்று இதுபோல ''பித்துக்குளித் திட்டங்களை'' காங்கிரஸ் சர்க்கார் மேற்கொண்டபோது, தீயன அவை என்பதை நன்கறிந்த காரணத்தால் அத் தீய திட்டங்களைக் காரசாரமாகவே தாக்கி இருக்கிறோம் — அதில் தவறென்ன? காங்கிரசோ, ஏனைய கட்சிகளோ, நல்லன புரிந்தபோதெல்லாம் போற்றுகிறோம் — அல்லன செய்தால் தாக்குகிறோம். எங்களுடைய இந்த நடைமுறையையே அறியாமல் நீர் கேள்விப் பாணத்தைப் பூட்டிய காரணத்தால்தான் யாரோ கூறிய கேள்வியை ஆராயாமல் அப்படியே எழுதி அனுப்பினீர் நீர் என்று தொடக்கத்தில் கூறினேன். நியாயந்தானே நான் கூறியது? நீரே கூறும்! ஆமாம், எங்களைத்தான் மந்தபுத்தி படைத்தவர்கள் என்று கூறிவிட்டீர், போனால் போகிறது, ஏதோ கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டிவிட்டீர், ஆனால் இவ்வளவு மடமை நிறைந்த கேள்வியை புத்திசாலித்தனமான கேள்வி என்று எண்ணிய வண்ணம் பெருமையுடன் அனுப்பி இருக்கிறீரே நீர், உம் புத்தியை என்ன புத்தி என்று அழைப்பது—கொஞ்சம் தெரிவிப்பீர்களா?

**3. காங்கிரஸ் பத்திரிகைகளும் தமிழுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்கின்றன. உங்கள் ஏடுகளும் அதுபோலவே சொல்லிக்கொள்கின்றன. இவற்றில் யார் கூறுவது உண்மை?**

இந்த மகத்தான உண்மையை அறிய நீர், எங்கள் பெரியார் அவர்கள் கூறுவது போல கட்டுச்சோறு கட்டிக்கொண்டு காத தூரம் பயணம் செய்யவேண்டியதில்லை. நீர் குறிப்பிடும் இரு கட்சிப் பத்திரிகைகளையும் எடுத்து வைத்துக்கொண்டு, அவற்றின் பெயர்களை ஒரு முறை கவனித்தாலே போதும், யார் தமிழுக்காகப் பாடுபடுபவர்கள் என்ற உண்மை தெளிவாகத் தெரிந்துவிடும். பத்திரிகைகளைத் தேடிப்பிடித்து அவற்றின் பெயர்களை உற்றுக் கவனிக்கும் 'சிரமம்' தான் உமக்கு என்னத்திற்கு — அந்தப் பணியையும் நானே செய்துவிடுகிறேன்! காங்கிரஸ் ஏடுகள் சில: ஹிந்து, சுதேசமித்திரன், பாரததேவி, தினசரி, ஆதந்தவிகடன், ஸ்வதந்த்ரா, கல்கி, ஹிந்துஸ்தான், ஹனுமான் — இந்தப் பெயர்கள் அவ்வளவும் தமிழ் அல்ல! எங்கள் ஏடுகளில் சில: விடுதலை, திராவிடநாடு, குடிஅரசு, போர்வாள், பொன்னி, தனி அரசு, மன்றம், புது வாழ்வு—இந்தப் பெயர்கள் அவ்வளவும் தூய செந்தமிழ்! இப்போது கூறுமையா நண்பரே கூறும், தமிழுக்காகப் பாடுபடுபவர்கள் யார் — அந்த வடமொழிப் பெயர் சூடியவர்களா, நாங்களா?

**4. ஸ்ரீமான், திருவாளர், தோழர் — இந்த மூன்று வித மரியாதைச் சொற்களில் எதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள், ஏன்?**

இந்த மூன்று சொற்களில், திருவாளர், தோழர், இரண்டும் தமிழ்ச் சொற்கள். ஸ்ரீமான் — வடமொழிச் சொல். தமிழர்களாகிய நமக்கு தமிழ்ச் சொல்லே வேண்டும். எனவே ஸ்ரீமான், ''ஸ்ரீமான்''களைத் தேடிக்கொண்டு போகட்டும் —தமிழர்களாகிய நமக்கு வேண்டாம்!

(3-ம் பக்கம் பார்க்க]